5.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.541/2019

PROSECUTION WITNESS L.W.5 /P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நடராஜ் | Caste | : | |
| Father's Name | : | சுந்தரம் | Calling | : | |
| Husband’s Name | : | | | | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 24.09.2024

முதல் விசாரணை

1) நான் கதிரம்பட்டியில் குடியிருந்து கொண்டு பஞ்சாயத்து எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன்.

2) நான் இரங்கம் பாளையம் பஸ் நிறுத்ததில் நின்று கொண்டிருந்தபோது, போலீசார் அங்கு விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தனர். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் கையொப்பம் செய்தவர் யார் என்று எனக்கு தெரியவில்லை. **(29.11.2018 ம் தேதியிட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

1) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்பது எனக்கு தெரியாது. நான் மேற்படி கையொப்பம் செய்த ஆவணம் எழுதப்பட்ட ஆவணமா என்பதும் எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு

பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.541/2019

PROSECUTION WITNESS L.W.3 /P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்தி | Caste | : |
| Father's Name | : மாது | Calling | : |
| Husband’s Name | : | | |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 24.09.2024

முதல் விசாரணை

1) நான் திண்டலில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன்.

2) சுமார் 5,6 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் சென்னிமலைக்கு வேலைக்காக செல்லும்போது, பேருந்தில் ஒரு பெரியவரின் செல்போனை பறித்துக் சென்றதாக ஒருவரை பிடித்தார்கள். பிறகு காவல்நிலையம் சென்று அங்கு ஒரு சாட்சி கையொப்பம் போட்டேன். அந்த செல்போனை பறித்துச் சென்ற நபரை எனக்கு அடையாளம் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 91 ல் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். (29.11.2018 **ம் தேதியிட்ட படிவம் 91 ன் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட

குறுக்கு விசாரணை:

1) 29.11.2018 ம் தேதி, மாலை சுமார் 6.00 மணிக்கு, சொந்த வேலையாக சென்னிமலை செல்ல வேண்டி ஈரோட்டில் பஸ்சில் ஏறி பஸ்சின் பின்புற படிக்கட்டுக்கு அருகே பயணம் செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என்னுடன் மாதேஸ்வரன் என்பவரும், சந்திரசேகர் என்பவரும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. பஸ்சானது சுமார் 6 1/4 மணியளவில் சென்னிமலை ரோட்டில் இரங்கம்பாளையம் பஸ் நிறுத்தம் அருகே வந்து நின்றபோது, மாதேஸ்வரன் தீடிரென்று 20 வயது நபருடைய ஒரு நபரை கைகாட்டி திருடன் திருடன் என சத்தம்போட்டாரா என்றால் சரிதான்.

2) நானும் சந்திரசேகரும் சட்டென்று பஸ்சை விட்டு இறங்கி ஓடி அவரை மடக்கி பிடித்து விசாரிக்க மாதேஸ்வரனின் செல்போனை பாக்கெட்டில் இருந்து திருடியதாகவும், தண்ணி அடிக்க பணம் இல்லாததால் திருடியதாக ஒப்புக் கொண்டார் என்றால் சரிதான். அந்த பையனை பிடித்து கேட்டபோது, தனது பெயர் விக்னேஷ் என்று கூறினாரா என்றால் இல்லை. நானும், சந்திர சேகரன், மாதேஸ்வரன் ஆகியோரும் 20 வயது மதிக்கத்தக்க ஒரு நபரை காவல்நிலையத்தில் ஆஜர்படுத்தினோம் என்றால் சரிதான்.

3) காவல்நிலையத்தில் வைத்து மாதேஸ்வரன் புகார் கொடுத்தாரா என்றால் அவர் யாரென்றே எனக்கு தெரியாது. வழக்கு பதிவு செய்து விசாரிக்க எங்கள் முன்னிலையில் அந்த நபர் திருடியதை ஒப்புக் கொண்டு பேண்ட் பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த இணோவா, கோல்ட் கலர் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார் என்றால் சரிதான். செல்போனை எடுத்து ஆஜர் செய்தபோது செல்போனை படிவம் 91 ன் மூலம் கைப்பற்றியதில் நான் கையொப்பம் செய்தேன்.

4) மேற்படி சம்பவம் எனக்கு தெரியும் எனவும், எனக்கு எதிரியை தெரியும் என்றும், எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை வாய்ப்பளித்தும் இல்லை.